பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 28 | திங்கட்கிழமை | 14.10.2024 | அதிர்வு 73

## அநுர அரசுடன் சேர்ந்து செயற்பட வடக்கு அரசியல் கட்சிகள் தயாராம்

(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)



# நான் தமிழரசை விட்டு வெளியேறவேமாட்டேன்

### இந்தத் தேர்தலில் எமது கட்சி 15 ஆசனங்களையாவது கைப்பற்ற வேண்டும் என்று சிறீதரன் நேற்று தெரிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

"நான் இலங்கைத் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறிவிடுவேன் எனப் பலர் கூறுகின்றார்கள். நான் ஒருபோதும் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறமாட்டேன். என்னைக் கட்சியை விட்டு வெளியேற்றுவதற்குப் பலர் முயற்சி செய்கின்றார்கள். ஆனால், நான் கடைசி வரை போராடுவேன். நாங்கள் இந்தத் தேர்தலில் குறைந்தபட்சம் 15 நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

06

# சின்னத்தைத் திருடியோருக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்

### தமிழரசின் முன்னாள் எம்.பி. சுமந்திரன் வலியுறுத்து



(பிரபாகரன் டிலக்சன்)

"ஒரு காலகட்டத்தில் திருடர்களாக, கப்பம் பெற்றவர்களாக, கடத்தல்காரர்களாக, கொள்ளையர்களாக, கொலையாளிகளாக இருந்தவர்கள் திருந்தி விட்டார்கள் என்று நம்பி

06




நீதியரசர் சேவைக்குப் பின்னர் ஓய்வில் இருந்த சி.வி.விக்னேஸ்வரன் 'அக்காடா' என்று தனது குரு நித்தியானந்தா சுவாமிகள் காட்டிய வழியில் இறை வழிபாட்டில் மும்முரமாக ஈடுபட்டு இருந்தார்.

சம்பந்தனும் ஏனையோரும் வருந்தி அழைத்தமையால் வடக்கு அரசியலுக்கு வந்து குதித்த அவர், அந்தத் துறையில் ஈட்ட வேண்டியவற்றை ஈட்டி கொண்டு மீண்டும் தன்னுடைய லௌகீக வாழ்க்கைக்கு திரும்பும் நோக்கோடு கொழும்புக்கு மூடை முடிச்சுகளை கட்டுகிறார் என விடயமறிந்து வட்டாரங்கள் கூறுகின்றன.

ஐந்து வருடங்கள் முதலமைச்சர் பதவி, ஐந்து வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி போன்றவற்றை அவற்றின் சிறப்புரிமைகளோடு அனுபவித்து ஆண்ட பின்னர், அவர் மீண்டும் கொழும்பு திரும்பத் தயாராகி விட்டார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

வடக்கு மாகாண சபை

06



# அம்பாந்தோட்டையில் இருந்து விரட்டப்பட்ட ராஜபக்ஷக்கள்!

இலங்கையில் 1936 ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் ஈடுபட்டு வருகின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் தந்தையான டி.ஏ. ராஜபக்ஷ அரச பேரவையில் அங்கம் வகித்துள்ளார்.

அதன்பின்னர் 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெலியத்த தொகுதியில் இருந்து சபைக்கு தெரிவானார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவர் இவர்.

ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த லக்ஸ்மன் ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, நிருபமா ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்தே அரசியல் பயணத்தை ஆரம்பித்தனர்.

இதனால்தான் ராஜபக்ஷ குடும்பத்தின் அரசியல் கோட்டையாக அம்பாந்தோட்டை விளங்குகின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து தொகுதிகளையும் அநுரகுமார திஸாநாயக்க கைப்பற்றினார்.

இந்நிலையில், இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து எந்தவொரு ராஜபக்ஷவும் தேர்தலில் போட்டியிடவில்லை. நாமல் ராஜபக்ஷகூட தேசியப் பட்டியலுக்குள் நுழைந்துள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தில் இருந்து ஒருவர் மாத்திரமே – சசீந்திர ராஜபக்ஷ, மொனராகலை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவர்தான் காமினி திஸாநாயக்க. நவீன் திஸாநாயக்க மற்றும் மயந்த திஸாநாயக்க ஆகியோரின் தந்தை அவர்.

காமினி திஸாநாயக்கவின் மறைவின் பின்னர் அவரது மனைவி தேர்தலில் ஈடுபட்டார். அதன்பின்னர் நவீன் திஸாநாயக்க, மயந்த திஸாநாயக்க ஆகியோர் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டனர். நவீன் திஸாநாயக்க நுவரெலியாவிலும், மயந்த திஸாநாயக்க கண்டியிலும் களமிறங்கியுள்ளனர். ஆனால், இம்முறை இருவரும் போட்டியிடவில்லை.

சேமசிங்க குடும்ப வாரிசான செஹான் சேமசிங்கவும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல, தனது மகளுக்கு அரசியல் களத்தை அமைத்துக் கொடுப்பதற்காக இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. கண்டி மாவட்ட எம்.பியான குணதிலக ராஜபக்ஷவும், தனது மகனைக் களமிறக்கிவிட்டு ஓய்வுபெற்றுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, குடியரசுக் கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, மஹஜன எக்சத் பெரமுனவின் தலைவர் தினேஷ் குணவர்தன, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் மூத்த தலைவர் வாசுதேவ நாணயக்கார, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோரும் தேர்தலில் போட்டியிடவில்லை.

# ஐக்கிய மகளிர் சக்தி தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து விலகினார் ஹிருணிக்கா



ஐக்கிய மகளிர் சக்தியின் தேசிய அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுவதாக ஹிருணிக்கா பிரேமச்சந்திர அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் தாம் கட்சியின் பொறுப்புகளில் இருந்து விலகுவதாக அவர் இதன்போது அறிவித்துள்ளார்.




# அநுர அரசுடன் சேர்ந்து செயற்பட வடக்கு அரசியல் கட்சிகள் தயாராம்

## ஜனாதிபதியிடம் முக்கிய தமிழ்த் தலைவர் ஒருவர் கூறினாராம்

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் அரசுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றார்கள் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களின் ஒன்றுகூடலொன்று தலவத்துகொட கிரேன்ட் மொனார்க் ஹோட்டலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"குற்றச்சாட்டுக்களிலிருந்து நாடாளுமன்றத்தை விடுவிப்பதற்கான சிறந்தவொரு சந்தர்ப்பமே பொதுத் தேர்தல்.

வடக்கின் முக்கிய அரசியல் தலைவர் ஒருவரைச் சந்தித்த போது, வடக்கு மக்கள் எம்முடன் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளனர் என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றம் வலுவான பிரதிநிதித்துவத்தையும் பண்புகளையும் கொண்டிருக்க வேண்டும்.

எவ்வாறாயினும், நாடாளுமன்றம் மக்களின் சொத்துக்களை வீணடிக்கும் இடமாக முத்திரை குத்தப்பட்டுள்ளது.

எனவே, நாட்டுக்காக சில தீர்மானங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான பலமான அரசியல் பலத்தை எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பெற வேண்டும்.

பலமான அரசியல் தலைமைத்துவம் கொண்ட பொறிமுறையொன்றை நாம் பெற்றால் மாத்திரமே புதிய வேலைத் திட்டத்தை யதார்த்தமாக்க முடியும்.

ஜனாதிபதி உட்பட மூவர் கொண்ட அமைச்சரவையே உள்ளது. மாற்றத்தை உண்மையாக்க இது எந்த வகையிலும் போதுமானது இல்லை.

புதிய பலமான அரசியல் சக்தி ஸ்தாபிக்கப்படும் வரை ஓர் இடைக்கால அமைச்சரவையில் மூவர் உள்ளோம்.

இந்த இடைநிலை கட்டத்தில், நாம் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

சில தீர்மானங்களையும் நடவடிக்கைகளை எடுக்கவும் வலுவான அரசியல் சக்தி இருக்க வேண்டும்." – என்றார்.










# நீர்க்கட்டணம் செலுத்தாத முன்னாள் எம்.பிக்கள்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் 41 பேர் தமது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான நீர்க்கட்டணங்களை இன்னும் செலுத்தவில்லை என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு அறவிடப்படாது நிலுவையில் உள்ள தொகை 9 மில்லியன் ரூபாவாகும்.

பொதுவிதிகளுக்கு அமைய மேற்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சபை குறிப்பிட்டுள்ளது.

எவ்வித விசேட சலுகைகளும் இன்றி சுற்றறிக்கைகளுக்கு அமைய அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை குறிப்பிட்டுள்ளது.

# வெள்ளநீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு; தாழ்நிலப் பகுதி மக்களுக்கு எச்சரிக்கை



முல்லேரியா - களனிமுல்ல பகுதியில் வெள்ளநீரில் மூழ்கி 34 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளம் நிறைந்திருந்த பகுதியில் தோணியில் பயணித்த ஒருவரே தோணி கவிழ்ந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 34 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அத்தனகலு ஓயாவிற்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கையானது, அடுத்த 48 மணிநேரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, சீதாவக்க, தொம்பே, ஹோமாகம, கடுவெல, பியகம, கொலன்னாவ, கொழும்பு, வத்தளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த களனி கங்கையை அண்மித்து தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கோரப்பட்டுள்ளனர்.



# 36 மணித்தியாலங்களுக்கு தொடரும் மழை; பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்கு மழையுடனான காலநிலை தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை எதிர்வு கூறியது.

மேல், சப்ரகமுவ, மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் 75 மில்லி மீற்றர் வரையான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, நாட்டில் 2 மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நுவரெலியா மற்றும் குருநாகல் மாவட்டங்களுக்கு இவ்வாறு முதலாம் நிலை மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் தபால் மூல வாக்களிப்பு இன்று




எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ள எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ளது.

இன்று தபால் மூலம் வாக்களிக்க முடியாதவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி அஞ்சல் மூலம் வாக்களிக்க முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட 10 அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியிருந்தன.

எனினும் அங்கீகரிக்கப்பட்ட 8 அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவும் தங்களது வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் நேற்று முன்தினம் தபால் நிலையங்களில் கையளிக்கப்பட்டன.

அவை எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட்ட சமயம் அவருக்கான ஜாகை, இடம், வசதிகள் எல்லாவற்றையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கியது. பின்னர் முதலமைச்சர் பதவி, தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மூலம் வசதி வாய்ப்புகள் கிட்டின.

இப்போது நாடாளுமன்ற பதவி முடிந்து விட்டது.அடுத்த தடவை தேர்தலில் அவர் பங்கு பற்றவில்லை. நிலைமை உணர்ந்து – யதார்த்தம் புரிந்து – விலகிக் கொண்டார். இளைஞர்களுக்கு இடமளித்து விலகுகின்றார் எனப் பீற்றியும் கொள்ளத் தவறவில்லை.

இனி, வடக்கில் தங்கி இருந்து என்ன பிரயோசனம் என்று எண்ணி இருப்பார். அதனால் மூடை, முடிச்சுகளைக் கட்டத் தயாராகி விட்டார் எனத் தெரிகிறது.

கொழும்பில் போய் தங்கி விட்டாலும், யாரும் கேட்டால் சுகவீனம், மருத்துவ சேவை, மருத்துவ ஆலோசனை, மருத்துவக் கவனிப்பு என்று கூறப் பல விடயங்கள் இருக்கின்றன – பதிலாகத் தருவதற்கு.

வந்த வேலை முடிந்துவிட்டது. ஆண்டு அனுபவித்து முடிந்தாயிற்று. இனி என்ன? புறப்பட வேண்டியது தானே – கொழும்புக்கு....!

---

## சின்னத்தைத் திருடி...

(முதலாம் ப்க்கத் தொடர்ச்சி...)

சேர்த்து வைத்திருந்தோம். ஆனால், அவர்கள் திருந்தவில்லை. முன்னர் கட்சிப் பெயரைத் திருடினார்கள் இப்போது சின்னத்தையும் திருடியுள்ளார்கள்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா நேற்று மாலை யாழ். தந்தை செல்வா மண்டபத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"1956 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பிரதான தமிழ்க் கட்சியாக இருப்பது இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டுமே. வேறு எவருக்கும் எங்களுடைய மக்கள் ஜனநாயக ஆணையைக் கொடுக்கவில்லை. இனியும் கொடுக்கப் போவதுமில்லை.

தமிழ் மக்கள் ஒரு தனித் தேசம் என்று அறிவித்து இதுவரை காலமும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்ற கட்சிதான் பலமான அணியாக நாடாளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும்.

மத்தியிலே ஆட்சி அமைத்திருக்கக் கூடிய கட்சிக்கு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திலே ஓர் ஆசனம் கிடைக்குமாக இருந்தால் அவர்கள் இங்கிருக்கும் மக்கள் எங்களையும் பிரதிநிதியாக ஏற்றிருக்கின்றார்கள் என்பதனைச் சொல்லுவார்கள். அதற்கு நாம் இடமளிக்கக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தலோடு ஓர் ஆபத்து வந்திருக்கின்றது. பல தடவைகள் நாங்கள் அபாயச் சங்கை ஊதினோம். அது கைமீறிவிட்டது. பொதுவான சின்னத்தையும் திருடி விட்டார்கள். சின்னத்தைத் திருடியவர்கள் அதற்கு முன்னர் எங்களுடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரைத் திருடினார்கள். திருடுவது என்பது அவர்களுடைய வாழ்க்கை வழி முறையாகவே இருந்திருக்கின்றது.

ஒரு காலகட்டத்தில் திருடர்களாக, கப்பம் பெற்றவர்களாக, கடத்தல்காரர்களாக, கொள்ளையர்களாக, கொலையாளிகளாக இருந்தவர்கள் திருந்திவிட்டார்கள் என்று நம்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சேர்த்து வைத்திருந்தோம். ஆனால், அவர்கள் திருந்தவில்லை.

கட்சிப் பெயரைத் திருடினார்கள். மக்களுக்குப் பொய்யான நம்பிக்கையை ஊட்டி அந்தச் சின்னத்தையும் திருடிவிட்டார்கள். கடந்த மாதம் 23ஆம் திகதி நள்ளிரவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அதற்கு முன்னர் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. சங்கு சின்னத்தைத் தாம் பயன்படுத்த மாட்டோம் என்று. அவர்களுக்கு தங்களின் கையெழுத்தின் பெறுமதி தெரியவில்லை.

சின்னத்தைத் திருட மாட்டோம் என்று கையெழுத்திட்டவர்கள் ஒரு சில மணித்தியாலங்களுக்கு உள்ளேயே குத்துவிளக்கைக் கைவிட்டு சங்கைத் தருமாறு தேர்தல் திணைக்களத்துக்குக் கடிதம் கொடுத்தார்கள். இவ்வாறான கள்ளருக்கு இம்முறை மக்கள் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். மாம்பழத் திருடர்களுக்கும் மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

எங்கள் கட்சியிலிருந்து வெளியேறிய ஒருவர் அபலைப் பெண்ணுக்கு மதுபான சாலை உரிமம் கொடுத்தேன் என்று வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார்.

ஊழலுக்கு எதிரான அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடிய இந்த அரசு இரண்டு விடயங்களில் தடுக்கி விழுந்து கொண்டிருக்கின்றது. ஒன்று ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான செலவீனங்களைத் தேர்தல் திணைக்களத்துக்கு இதுவரை கொடுக்கவில்லை. மற்றையது மதுபான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றவர்களின் பெயர் விவரங்களை மூன்று நாட்களுக்குள் வெளிப்படுத்துவோம் எனக் கூறினார்கள். மூன்று வாரமாகிவிட்டது, இன்னும் வெளிப்படுத்தவில்லை.

நான் பகிரங்கமாக அரசுக்குச் சவால் விடுகின்றேன் மதுபான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றவர்களின் விபரங்களை வெளிப்படுத்துங்கள். எங்களுடைய கைகள் சுத்தமாக உள்ளது. எங்களை விட்டு வெளியேறிச் சென்றவர்களின் உண்மை முகத்தை மக்களிடம் வெளிக்காட்ட உதவியாக இருக்கும். ஏன் எங்களை விட்டு வெளியேறினார்கள் என்பதற்கு அது ஒரு காரணமாக இருக்கும்.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவிலே நாங்கள் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றோம். இளையவர்களுக்கு நாங்கள் முன்னுரிமை வழங்கியிருக்கின்றோம். மக்கள் கேட்கின்ற மாற்றத்துக்கு நாங்கள் இடம் கொடுத்திருக்கின்றோம். அதற்கு ஈடுகொடுக்க முடியாதவர்கள் கட்சியை விட்டு வெளியேறியிருக்கின்றார்கள். தேர்தலில் ஆசனங்கள் கிடைக்கவில்லை என்பதற்காகத் தேர்தல் காலங்களில் வெளியேறியிருக்கின்றார்கள்.

கொள்கைப் பிடிப்பில் வெளியேறுவதெனில் தேர்தல் காலத்தில் வெளியேறாமல் வேறு நேரத்தில் வெளியேறிருக்கலாம். தேர்தல் காலங்களில் வெளியேறுவர்களைக் குறித்து மக்களுக்கு அவதானம் இருக்கின்றது. அதனை நாம் மக்களுக்குச்சொல்லத்தேவையில்லை. அவர்களை எல்லாம் ஒரு பொருட்டாகக் கருதத் தேவையில்லை." – என்றார்.

## நான் தமிழரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை யாழ். தந்தை செல்வா மண்டபத்தில்நடைபெற்றது. அதில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்களுக்கு இணைந்த வடக்கு – கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடிநாதமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு கட்சியே இலங்கைத் தமிழரசு கட்சி. அதனுடைய கொள்கை பிறழாது, அதனுடையதாகம்தீராது, அதனுடைய அடிப்படை மாறாது எங்களுடைய கட்சி இப்போதும் நிலையான பயணத்தைச் செய்து வருகின்றது.

தற்போது நாட்டிலேயே மாற்றம் பற்றி அதிகம் பேசப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் ஏற்பட்ட மாற்றமானது ஒரு மாயையாக இருக்கலாம். அல்லது நீண்ட பயணத்தினுடைய ஒரு தொடக்கமாகக் கூட இருக்கலாம். ஆனால், அது நல்லதாக இருந்தால் நாங்களும் அவர்களோடு கைகோர்க்கத் தயாராகவுள்ளோம் என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம்.

சிங்களத் தலைவர்கள் இதயசுத்தியோடு தமிழர்களுக்கான அரசியல் தீர்வைத் தருவார்களா என நாங்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

25 வருடங்களாக கிடப்பில் இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, 2004ஆம் ஆண்டு தமிழீழத்தின் தேசியத் தலைவர் பிரபாகரனின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் வெளியே வந்தது. அந்தக் கட்சியினுடைய பாரம்பரியம் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மீண்டும் ஒரு புதுப்பொலிவைப் பெற்றுப் பயணம் செய்து வருகின்றது.

நாம் குறைந்தபட்சம் 15 நாடாளுமன்ற ஆசனங்களை எடுக்க வேண்டும். அவ்வாறு பெற்றால் எங்களுக்கான மாற்றத்தைத் தரும் களமாக அது மாறும். அதிலிருந்து நாம் பின்வாங்கினால், எங்களுடைய மக்கள் சரியான முடிவுகளை எடுக்கத் தவறினால் நாங்கள் தோற்றுப் போன இனமாக மாறிக் கொண்டே போவோம்.

பலர் நான் கட்சியை விட்டு வெளியேறி விடுவேன் எனக் கூறுகின்றார்கள். நான் ஒருபோதும் தமிழரசுக் கட்சியை விட்டு வெளியேறமாட்டேன். என்னைக் கட்சியை விட்டு வெளியேற்றுவதற்குப் பலர் முயற்சி செய்கின்றார்கள். ஆனால், நான் கடைசி வரை போராடுவேன். பகிரங்கமாகச் சொல்கின்றேன் ஒரேயொரு கட்சி அரசியல் அது இலங்கைத் தமிழரசுக் கட்சியே.

நான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தலில் வெற்றி பெற்ற போதும் வழக்கை எதிர்கொண்டு வருகின்றேன். எனது கட்சிக்காரர்களே நான் தலைவராகச் செயற்படக்கூடாது என வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார்கள். அத்தனை சவால்களையும் தாண்டி இந்தக் கட்சியில் இருக்கின்றேன்.

ஒரு கட்சியாக ஒருங்கிணைய வேண்டும். அலைபாயக்கூடாது. நாங்கள் ஒற்றுமையாக இருக்கின்றபோதுதான் வரலாற்றின் வெற்றிகள் எங்களைத் தேடி வரும். இயற்கையும் வரலாறும் 07

# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம்

## ஜனாதிபதி பணிப்புரை

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட அவதானத்துடன் செயற்படுமாறும், நிவாரணப் பணிகளை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அறிவித்துள்ளார்.

அவசரகால நிலைமையால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தந்த மாகாணங்களின் அரச அதிகாரிகளை தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் அந்த நிவாரணங்களை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். அதுவரை மக்கள் அவதானமாக இருக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக 50 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு நிதியமைச்சிற்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, உரிய நிவாரணங்களை முறையாக மக்களுக்கு வழங்குவதற்கு நன்கு ஒருங்கிணைந்து செயற்படுமாறும் அரச அதிகாரிகளுக்கு மேலும் அறிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 11 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் 6,018 குடும்பங்களைச் சேர்ந்த 24,492 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



23 நிவாரண மையங்களில், 584 குடும்பங்களைச் சேர்ந்த 2,200 பேர் தற்போது பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகத்தின் ஊடாக, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அரச அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடன் நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவசரகால நிலைமைகள் பற்றிய தகவல்களை, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 அழைப்பு நிலையம் மற்றும் 0112136136, 0112136222, 0112670002 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தெரிவிக்கலாம் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மெதிரிகிரியவில் உழவு இயந்திரம் கவிழ்ந்ததில் ஒருவர் உயிரிழப்பு



மெதிரிகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குசும் பொகுன பகுதியில் சிறிய உழவு இயந்திரமொன்று வீதியில் கவிழ்ந்து அதன் சாரதி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் குசும் பொகுன திவுலங்கடவல பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் ஆவார்.

இந்த உழவு இயந்திரம் பிங்பார பகுதியிலிருந்து குசும் பொகுன நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்துள்ளது.

இதன்போது சாரதி உழவு இயந்திரத்தின் அடியில் விழுந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான சாரதி மெதிரிகிரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## நான் தமிழரசை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு காலமும் தவறுவிடாது.

அண்மை காலங்களிலே என் மீதான சேறுபூசல்கள் மிகப்பெரிய அளவிலே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மதுபான சாலைக்கான சிபாரிசு கடிதத்தைச் சிறீதரன் எம்.பி. வழங்கினார் என்று பலர் தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர்.

என் மீதான தவறான தகவல்களைப் பரப்பியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காகப் பொலிஸ் நிலையத்திலே முறைப்பாடு செய்துள்ளேன். வழக்கைத் தொடர்ச்சியாகவும் நடத்தவுள்ளேன். நான் இந்த விடயத்தை விடப்போவதில்லை.

நான் மதுபான சாலைக்கான சிபாரிசுக் கடிதத்தை நான் வழங்கியிருந்தால் அதனை வெளிப்படுத்தவும். அதனை வெளிப்படுத்தாமல் வெறுமனே ஊகங்கள் அடிப்படையில் எழுதுவதைத் தவிருங்கள். உண்மைகளை எழுதுங்கள்.

அரசியலில் உள்ளவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்த காலத்தில் அரசியலுக்குள் வந்தவன் நான். என்னுடைய அரசியல் அரசியல் பயணம் என்பது வெறும் பஞ்சு மெத்தைக்குள் வந்ததல்ல. நான் கல்லிலும் முள்ளிலும் நடந்து வந்தவன்.

நான் மதுபான சாலைக்கான சிபாரிசுக் கடிதத்தைக் கொடுத்தவனும் அல்லன், இனிமேல் கொடுக்கப் போறவனும் அல்லன். என்னுடைய இனத்துக்கு விரோதமான, என்னுடைய கட்சிக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன் என்பதை இங்கு பகிரங்கமாகச் சொல்ல விரும்புகின்றேன்.

என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்களே என்னைப் பற்றி தவறாக எழுதுகின்றார்கள். சிலர் சொல்லுவதைக் கேட்டு மோசமாக எழுதினார்கள். அவை எல்லாவற்றையும் கடந்து வந்து பொறுமையோடும் நிதானத்தோடும் என்னுடைய அரசியலை மேற்கொண்டு வருகின்றேன்." – என்றார்.

# தோல்வியை தவிர்ப்பதற்கு சில அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிடுவதினை தவிர்த்துள்ளனர்

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



"ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய மற்றும் இனவாத கொள்கைகளை உடைய அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்குவது அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியாகியமைக்கு கிடைத்த வெற்றி என்று தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தோல்வியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய மற்றும் இனவாத கொள்கையுடைய அரசியல்வாதிகள் இந்த முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

பொதுத் தேர்தலில் அவ்வாறான அரசியல்வாதிகள் வேட்பாளர்களாக நிற்காத நிலையை ஏற்படுத்தியமையானது தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த பெருவெற்றியாகும் அநுரகுமாரவை ஜனாதிபதியாக தெரிவு செய்யதமைக்காக மக்களிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

அநுரகுமார திசாநாயக்கவின் ஜனாதிபதி பதவிக்கான தெரிவு உடனடியாகவே ஊழல் மற்றும் இனவாத அரசியல்வாதிகளின் அரசியல் வாழ்க்கையை நிறைவுக்கு கொண்டுவந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமாரவிற்கு வாக்களித்தன் மூலம் மக்கள் சிறந்த செயலை செய்தனர். மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கானவொரு சந்தர்ப்பத்தினை உருவாக்கியுள்ளது.

இந்நிலையில், தோல்வியை தவிர்ப்பதற்காக அரசியல்வாதிகளில் சிலர் தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்துள்ளனர். எவ்வாறாயினும், மக்கள் மாற்றத்தினையே விரும்புகின்றனர்.

அதற்கான ஆணையை அவர்கள் சரியானக முறையில் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு அதிகமாக உள்ளது."– என்றார்.

# 11 அரசியல்வாதிகள் மாத்திரமே அரச வீடுகளை கையளித்துள்ளனர்



கடந்த அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை வகித்து அரச வீடுகளில் வசித்த 31 அரசியல்வாதிகளில் 11 பேர் மாத்திரமே அவற்றை மீளக் கையளித்துள்ளனர் என பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சியில் அமைச்சர்கள் வசிப்பதற்காக கொழும்புக்குள் வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றை மீளக் கையளிக்குமாறு தற்போதைய அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் காலத்தில் அமைச்சர்களுக்கு அவ்விதமான வீடுகள் மீண்டும் வழங்கப்படுமா, அது தொடர்பில் புதிய அரசின் கொள்கை என்ன என்று உயர்மட்ட அதிகாரியொருவரிடம் கேள்வி எழுப்பியபோது, அதுகுறித்து பின்னரே முடிவு எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது துணைகளின் அரசாங்கச் சலுகைகள் குறைக்கப்படும் என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மாவையின் அளப்பு

‘கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போவேன் என்றானாம்.’

அந்த மாதிரி இருக்கின்றது இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவராக இருந்த - இன்னும் இருக்கின்றாரோ என்று தெரியாத மயக்க நிலையில் கட்சியினரையும், மக்களையும் வைத்திருக்கின்ற - மாவை சேனாதிராஜா, தமிழரசுக் கட்சியை ஒற்றுமைப்படுத்தப் போகின்றார் என்று கூறும் கருத்து.

கட்சியின் தலைமை பதவியில் இருந்து ஏன் தாம் விலகினார் என்பதற்கான காரணத்தை அவர் இப்போது வெளியிட்டிருக்கின்றார் என ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அவர் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டாரா, இலையா என்பது கூட இன்னும் தெளிவில்லாத நிலையிலேயே நீடிக்கின்றது.

கட்சியைக் குழப்போ குழப்பு என்று குழப்பியடித்து, அதன் தாற்பரியத்தையே உடைத்துச் சிதைத்த மாவை சேனாதிராஜா, இப்போதுதாம் தலைமைப் பதவியில் இருந்து ராஜினாமா செய்திருக்கின்றாரா என்பதை கூடத் தெளிவாக வெளிப்படுத்த முடியாத ஓர் இக்கட்டிலேயே கட்சியை மாட்டி விட்டு நழுவியிருக்கின்றார்.

ஒழுங்கான தலைவராக இருந்து ராஜினாமாச் செய்பவராக இருந்தால் அவர் தம்முடைய ராஜினாமாக் கடிதத்தை கட்சியினுடைய செயலாளருக்கு அனுப்பியிருக்க வேண்டும்.

அந்த முறை தலை கூடத் தெரியாமல், கட்சியைக் குழப்பி அடித்து, சொதப்பி, சின்னாபின்னமாக்கிவிட்டு - இப்போது கட்சியின் தலைவராகவும் அவர் இருக்கின்றாரா, இல்லையா என்ற இரண்டும் கெட்டான் நிலையை உருவாக்கி விட்டு - எதிர்காலத்தில் கட்சியை ஒன்றுபடுத்தி, தமிழ் மக்களின் இலட்சியப் பயணத்துக்கான வலுவான சக்தியாக அதை மாற்றுவதற்கு பணியாற்றப் போகிறார் எனப் பீற்றி இருக்கிறார். கதை அளந்திருக்கின்றார்.

அவரது இந்தக் கருத்தினைக் கேட்கின்ற போது அழுவதா, சிரிப்பதா என்று தெரியாத நிலை தமிழ் மக்களுக்கு...!

பத்து வருடங்களுக்கு மேல் கட்சியின் தலைவராக தன்னை நிலை நிறுத்திய அவர், உரிய காலத்தில் கட்சியின் தேசிய மாநாடுகளை நடத்தாமல், கட்சியை குழப்பி அடித்து, தற்போதைய நெருக்கடி நிலை வரை அதை இழுத்து வந்து, அந்தரத்தில் விட்டு விட்டு, தாம் பதவியில் இருந்து வெளியேறும் விடயத்தில் கூட அரைகுறை அந்தரத்தில் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்.

ராஜினாமாச் செய்கின்ற முறைமை கூட சரியாகத் தெரியாத இந்தத் தலைவரினால் கட்சி பெரும் குழப்பத்தில் இருக்கின்றது.

கட்சி இப்படி முழுக் குழப்ப நிலைக்குவந்ததற்குஇத்தகைய பொறுப்பற்ற போக்கிலான தலைவரின் செயற்பாடுகள்தான் காரணம் என்பது அப்பட்டமானது.

நடந்து முடிந்த கட்சியின் தேசிய மாநாடு விவகாரம் நீதிமன்றத்தில் இழுபடுவதற்கு பிரதான சூத்திரதாரி அவர்தான்.

தம்மிஷ்டபடி எல்லாம் பொதுச் சபைக்கு ஆள்களைச் சேர்த்து, அதற்காக நீதிமன்றத்தில் போய் தலை குனிந்து நிற்க வேண்டிய நிலைக்கு தன்னையும் தள்ளி கட்சியையும் தள்ளியவர். இப்போது நடுவீதியில் கட்சியை விட்டு விட்டு விலகிய விடயத்திலும், குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டு, மீண்டும் கட்சியை ஒன்றுபடுத்த போகின்றார் என்று கதை அளக்கின்றார் அவர்.

கட்சியில் தனது பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் தான் கட்சியின் தலைமைப் பொறுப்பை துறந்தேன் என்று அவர் சொல்வது உண்மைதான். இதுவரை காலமுமான அவரது பரிந்துரைகள் கட்சி நலன் சார்ந்தவை அல்ல, சுயநலனும் தனி நலனும் சார்ந்தவை என்ற காரணத்தினால் தான் கட்சி அவரை மீறி நடக்க வேண்டிய நிலைமை வந்தது.

கட்சியின் தலைமைப் பதவியை துறந்து, கட்சிக்கு விடுதலை வழங்கிய பின்னரும், இப்போது மீண்டும் கட்சியை கொண்டு நடத்தப் போகின்ற கதையை அளக்கின்றார்.

அவர் தொடர்ந்து கட்சியின் உறுப்பினராக இருக்கலாம். ஆனால் இன்னொரு தடவை கட்சியை நிர்வகிக்க அல்லது வழிகாட்ட அவரிடம் ஒப்படைப்பதற்கு கட்சியின் சாதாரண உறுப்பினரும் தயாராக இருப்பானா என்பது சந்தேகத்திற்குரியதே.

# தேசியவாத காங்கிரஸ் கட்சியின் பாபா சித்திக் சுட்டுக் படுகொலை



அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பாபா சித்திக் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை - பாந்த்ரா கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

"பாபா சித்திக் கொல்லப்பட்ட செய்தி மிகுந்த வருத்தத்தை தருகிறது. இந்த குற்றச் செயலை செய்தவர்களுக்கு தகுந்த தண்டனை தரப்பட வேண்டும். அவர்களை விட்டு விடக்கூடாது. இந்த கடினமான சூழலில் பாபா சித்திக் குடும்பத்துக்கு எனது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தி அடைய வேண்டும்" என தேசியவாத காங்கிரஸ் அஜித் பவார் அணியின் பிரபுல் படேல் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு சம்பவத்தை தொடர்ந்து லீலாவதி மருத்துவமனையில் சிகிச்சைக்காக பாபா சித்திக் அனுமதிக்கப்பட்டார் என பொலிஸ் தரப்பில் தெரிவித்தனர். இருந்தும் அவர் உயிரிழந்தார்.

66 வயதான அவர் கடந்த 1976 முதல் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருந்தார். மூன்று முறை எம்.எல்.ஏ-வாக தேர்வு செய்யப்பட்டவர். அமைச்சராகவும் பணியாற்றி உள்ளார். கடந்த பெப்ரவரியில் தேசியவாத காங்கிரஸ் கட்சியில் இணைந்தார்.

இந்த நிலையில், சனிக்கிழமை மாலை நிர்மல் நகரில் உள்ள அவரது மகனின் அலுவலகத்துக்கு வெளியில் இருந்த போது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தை மூன்று பேர் நிகழ்த்தியுள்ளனர். அதில் இருவரை பொலிஸார் பிடித்துள்ளனர். ஒருவர் மாயமாகி உள்ளார். அவர்களிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அவரது உயிரிழைப்பை அடுத்து மாகாராஷ்டிரா மாநிலத்தில் ஆளும் கட்சி தரப்பு மற்றும் எதிர்க்கட்சிகள் தரப்பில் இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைவரும் குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

# பாபா சித்திக் கொலையின் எதிரொலி: சல்மான் கான் வீட்டுக்கு பாதுகாப்பு



அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும், மகாராஷ்டிராவின் முன்னாள் அமைச்சருமான பாபா சித்தி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், நடிகர் சல்மான் கானின் பாதுகாப்பு குறித்த அச்சம் அதிகரித்துள்ளது. இதனையடுத்து மும்பை பாந்த்ராவில் உள்ள அவரது வீடான கேலக்ஸி அடுக்ககத்தின் வெளியே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சல்மான் கானின் குடும்பத்தினர், சினிமாதுறை நண்பர்கள் அவரை சந்திக்க வருவதைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நடிகர் சல்மான் கான் அவரது நெருங்கிய நண்பர் பாபா சித்திக்கை இழந்திருப்பதால் மிகுந்த வேதனையடைந்துள்ளார் எனவும் மன வருத்தத்தில் இருக்கின்றார் என்றும் தகவல் அறிந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு லீலாவதி மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வந்ததும் அவர் தூங்க முடியாமல் தவித்ததாகவும், அடிக்கடி பாபா சித்திக் மகன் மற்றும் குடும்பத்தினரை விசாரித்ததாகவும் தெரிவித்தனர்.

சித்திக்க குடும்பத்தினருக்கு நெருக்கமான ஒருவர் கூறுகையில்,

"இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் குறித்து சல்மான் கான் தொலைப்பேசியில் கேட்டறிந்து வருகிறார். அடுத்த சில நாள்களுக்கான தனது தனிப்பட்ட சந்திப்புகள் அனைத்தையும் அவர் ரத்து செய்துவிட்டார். சல்மான் கானின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களும் இந்த இழப்பால் பெருமளவு சோகத்தில் உள்ளனர். அப்பாஸ் கான் மற்றும் சோகைல் கான் இருவரும் பாபாவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். அவருடைய இஃப்தார் விருந்தில் தவறாமல் கலந்து கொள்பவர்கள்" - என்றார்.

# காஷ்மீர் முதல்வராக 16ஆம் திகதி உமர் அப்துல்லா பதவியேற்கிறார்

காஷ்மீர் முதல்வராக உமர்அப்துல்லா எதிர்வரும் 16 ஆம் திகதி பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஹரியானாவில் 17 ஆம் திகதி பதவியேற்பு விழா நடைபெறுகிறது.

காஷ்மீரில் மொத்தமுள்ள 90 தொகுதிகளில் தேசிய மாநாட்டுக் கட்சி - காங்கிரஸ் கூட்டணி மொத்தம் 55 இடங்களை பெற்றுள்ளது. இதில் காங்கிரஸ் கட்சி 6 இடங்களில் மட்டும் வெற்றி பெற்றது. துணை நிலை ஆளுநர் 5 நியமன உறுப்பினர்களை நியமனம் செய்வார். இதற்கிடையில், சுயேச்சை எம்.எல்.ஏ.க்கள் 5 பேர் தேசிய மாநாட்டுக் கட்சிக்கு நிபந்தனையற்ற ஆதரவளிக்க ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதனால் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இல்லாமலும் தேசிய மாநாட்டுக் கட்சியால் ஆட்சி அமைக்க முடியும். எனினும், தேசிய மாநாட்டு கட்சிக்கு காங்கிரஸ் கட்சியும் நிபந்தனையற்ற ஆதரவு அளிக்கும் என்று ஜம்மு காஷ்மீர் காங்கிரஸ் தலைவர் தாரிக் ஹமீது காரா நேற்று தெரிவித்தார்.

காஷ்மீரில் ஆட்சி அமைக்க தேசிய மாநாட்டுக் கட்சி துணைத் தலைவர் உமர் அப்துல்லா துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹாவை சந்தித்து உரிமைகோரினார்.

அப்போது கட்சி எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் உமர் அப்துல்லாவை முதல்வராக தேர்ந்தெடுத்த கடிதத்தையும் அவர் வழங்கினார். இதையடுத்து தேசிய மாநாட்டு கட்சி சார்பில் உமர் அப்துல்லா எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை முதல்வராக பதவியேற்க உள்ளார்.

**ஹரியானாவில் பதவியேற்பு விழா**





# காசாவின் மத்திய, வடக்கு பகுதிகளில் இஸ்ரேல் தாக்குதல்: 29 பேர் உயிரிழப்பு

காசாவின் மத்திய மற்றும் வடக்கு பகுதிகளில் இஸ்ரேலினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 29 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒரு வாரத்திற்கு முன்னர் இஸ்ரேலிய படையினர் காசாவின் வடக்கு பகுதியில் உள்ள ஜபாலியாவை குறிவைத்துத் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்திருந்தனர்.

ஹமாஸ் அந்த பிராந்தியத்தில் மீண்டும் தமது கட்டமைப்புக்களை ஸ்தாபிக்க முனைவதைத் தடுப்பதற்காகவே யுத்த தாங்கிகளுடன் அந்த பிராந்தியத்தை சூழ்ந்ததாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாலியா முகாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர்.


அத்துடன், காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், இதனால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
























# ஐ.நா. அமைதிப் படை அலுவலகம் மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தியது

தெற்கு லெபனானில் உள்ள அமைதி காக்கும் படைகளை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸிடம் கோரிக்கை விடுத்த சில மணிநேரங்களில் அங்குள்ள ஐ.நா .அலுவகத்தின் பிரதான நுழைவாயில் மீது இஸ்ரேல் படை தாக்குதல் நடத்தியுள்ளது.

ஐ.நா அமைதிப் படைகளை தீங்கிழைக்கும் வழியிலிருந்து விடுவியுங்கள். அது இப்போதே உடனடியாக செய்யப்பட வேண்டும் என்று நெதன்யாகு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை லெபனானின் தெற்கு பகுதியில் உள்ள ஐ.நா இடைக்காலப் படையின் பிரதான வாயிலை இரண்டு இஸ்ரேலிய டாங்கிகள் நேற்று அழித்துவிட்டன என்று ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய துருப்புக்கள் பின்னர் பலவந்தமாக ஐ.நா. வளாகத்திற்குள் நுழைந்தன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து இஸ்ரேல் இதுவரை கருத்து தெரிவிக்கவில்லை, ஆனால் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஐ.நா. படைகளை எல்லைப் பகுதியில் இருந்து வெளியேறுமாறு வலியுறுத்திய சில மணி நேரங்களுக்குப் பின்னர் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இன்று அதிகாலை ஐ.நா. அலுவலகத்தின் பிரதான வாயிலை தகர்த்து உள்நுழைந்த இஸ்ரேலிய டாங்கிகள் வலுக்கட்டாயமாக உள்நுழைந்தன. எனினும் ஐ.நா. அதிகாரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் சுமார் 45 நிமிடங்களுக்கு பின்னர் அந்த டாங்கிகள் அங்கிருந்து வெளியேறின.

இதேவேளை அலுவலகத்திற்கு அருகே நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டை அடுத்து ஐ.நா. முகாமிற்குள் புகை நுழைந்த நிலையில், 15 அமைதி காக்கும் படையினர் தோல் எரிச்சல் மற்றும் இரைப்பை குடல் எதிர்வினைகள் உட்பட விளைவுகளை சந்தித்துள்ளனர்.


பாதிக்கப்பட்ட அமைதி காக்கும் படையினர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று ஐ.நா. வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.












- ஜூட் பிரகாஷ் -
(மெல்பேர்ண்)

# இன்று ஜே.வி.பி வென்று செய்வதை அன்று ஈரோஸ் நன்றே செய்த காதை

அலை அடிக்கும் போது, வழியில் நிற்கும் நாணல், கஞ்சல், குப்பை எல்லாவற்றையும் அலை அடித்துக் கொண்டு போகும். ஆனால், ஆழ வேரூன்றிய ஆலமரம் மட்டும் அசையாமல், அலையின் போக்கை சிரித்து ரசித்துக் கொண்டு நிற்கும். அரசியல் அலையும் அப்படித்தான்.

இலங்கையின் தமிழர் தாயகப் பிரதேசங்களில் மட்டுமல்ல, தமிழர்கள் செறிந்து வாழும் புலம்பெயர் தேசங்களிலும் ஜேவிபியின் “மாற்றம்” அலை அடிக்கிறது. இருமுறை ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டுத் தோற்ற ஜேவிபி இயக்கத்தின் அநுரகுமார திஸநாயக்க, ஜனாதிபதி தேர்தலில் வென்றதும், அவர் அடுத்தடுத்து நிகழ்த்தும் அதிரடி நடவடிக்கைகளையும், ஊழலற்ற தூய ஆட்சி பற்றி ஜேவிபி எடுக்கும் வகுப்புகளையும் சமூக வலைத்தளங்கள் எங்கும் எம்மவர்கள் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், 35 ஆண்டுகளிற்கு முன்னர் எங்கள் மத்தியில் இருந்த ஒரு ஆயுதப் போராட்ட இயக்கம், இன்று ஜேவிபி செய்து கொண்டிருக்கும் அத்தனையையும், தமிழ் மக்களிற்கு செய்ய முனைந்து, அதில் முதல் வெற்றியையும் பெற்றது என்பதையும் நாங்கள் மறந்து விட்டோமா? மாற்றத்தின் முன்னோடிகள் நாங்களாக அல்லவா இருந்திருக்க வேண்டும்?

ஜேவிபி எவ்வாறு சிங்கள தேசிய சோஷலிச சித்தாந்தத்தில் ஊறிப் போன இயக்கமோ, அதே போன்று, தமிழ் தேசிய சோஷலிச சித்தாந்தம் நிலை நின்ற ஈரோஸ் எனும் தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கம், 1989 பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 11 ஆசனங்களையும், தேசிய பட்டியலில் ஒரு ஆசனத்தையும் வென்று, மூன்றாவது பெருங்கட்சியாக இலங்கை நாடாளுமன்றத்தில் நுழைந்தது.

1977 பொதுத் தேர்தலில் “அடைந்தால் தமிழீழம் இன்றேல் சுடுகாடு” என்று கோஷமிட்டுக் கொண்டு, வடக்கு கிழக்கில் இருந்து பெருவாரியாகத் தெரிவான தமிழர் விடுதலைக் கூட்டணியினரில் நம்பிக்கையிழந்த தமிழ் மக்கள், இந்தியப் படையினரனதும் அதனோடு இணைந்து கொடூரங்கள் புரிந்து கொண்டிருந்த ஈபி, டெலோ, ஈன்டிஎல்எஃப் இயக்கத்தினரது அடக்குமுறைக்கு மத்தியிலும், நடாத்திக் காட்டிய மாற்றம் தான், 1989 தேர்தலில் ஈரோஸ் இயக்கம் நிகழ்த்திய அரசியல் மாற்றம், அடைந்த வெற்றி.

1989 தேர்தலில், வடக்கு கிழக்கில், இந்திய அரசின் வற்புறுத்தலின் பேரில், தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியானது, ஈபி, டெலோ, ஈன்டிஎல்எஃப் இயக்கங்களோடு தேர்தல் கூட்டணி அமைத்து, உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டது. இந்த மூன்று இயக்கங்களும் அன்று ஆயுதம் தரித்த ஒட்டுக் குழுக்களாக இந்தியப் படையினருடன் சேர்ந்து மக்களை வாட்டி வதைத்து கொண்டிருந்த காலமது. த்ரீ ஸ்டார்ஸ், மண்டையன் குழு போன்ற பதங்கள் மக்களை நடுநடுங்க வைத்த காலங்கள் அவை.

கூட்டணியின் 1977 தேர்தல் நாயகர்களான யோகேஸ்வரன், சிவசிதம்பரம், ஆனந்த சங்கரி ஆகியோர் யாழ்ப்பாணத்திலும், அமிர்தலிங்கம் மட்டக்களப்பிலும் போட்டியிட்டார்கள்.”இரத்த கறை படிந்த கைகளுடன் இணைந்து பிரசாரம் செய்ய மாட்டோம்” என்று அறிக்கை விட்டுவிட்டு யாழ்ப்பாணம் வந்திறங்கிய கூட்டணிகாரருக்கு அஷோக் ஹோட்டலை விட்டு வெளில வர பீச்சல் பயம். ஒரு பக்கம் இயக்கம், மறு பக்கம் மண்டையன் குழு யாரு எப்ப எங்க வைத்து போடுவாங்கள் என்று கிலியும் பயமும் அவர்களை அசோகா ஹோட்டலிற்குள் முடக்கியது. தங்களுக்கு பிரசாரம் தேவையில்லை, சனம் எங்களுக்கு தான் எப்படியும் புள்ளடி போடும் என்ற இறுமாப்பிலும், போன தேர்தலில் வென்ற ஆணவத்திலும் மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சாரங்களில் கூட்டணி இறங்கியது.

பெடியளை சித்திரவதை செய்து வீதிகளில் கொன்று போட்டுக் கொண்டும், பிள்ளைபிடி கட்டாய ஆட்சேர்ப்பு நடாத்திக் கொண்டும், யாழ்ப்பாணத்தை கலக்கத்தில் வைத்திருந்த ஈபிகாரன்கள் தான் தேர்தல் பிரச்சாரத்தில் கலக்கினாங்கள். யாழ்ப்பாணத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன், யோகசங்கரி ஆகியோரோடு யாழ் இந்துவில் பணியாற்றிய நவரத்தினம் யாழில் தேர்தலில் போட்டியிட, மூலை முடுக்கெல்லாம் ஈபியின் போஸ்டர், லவுட் ஸ்பீக்கர் அலறல், பிரச்சார கூட்டங்கள், பத்திரிகை விளம்பரம், இலவச சாராயம் என்று ஒரு முழு அளவிலான பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. தில்லு முல்லு பண்ணி 99.7மூ வாக்குகளுடன் கைப்பற்றிய ஒன்றிணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபை வேறு ஈபியின் கையில் இருந்ததால், ஈபிக்காரன்கள், செய்து கொண்டிருந்த கொடூரங்களைப் போல, தேர்தல் பிரச்சாரத்தில் ஒரு காட்டு காட்டினாங்கள்.

இயக்கம் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு, தேர்தலில் பங்குபற்றுவோர் துரோகிகள் என்றும் அறிக்கை விட்டது. நியமன பத்திரங்கள் கையளிப்பதற்கான கடைசி நாளில், அவ்வளவு நாளும் அமைதி காத்த ஈரோஸ் இயக்கம், வன்னிக் காட்டுக்குள் இருந்து பச்சை சிக்னல் கிடைத்ததும், சுயேச்சைக் குழுவாக வடக்கு கிழக்கில் தேர்தலில் களமிறங்கியது. இயக்கத்தின் மறைமுக ஆதரவுடன், இந்திய சார்பு கட்சிகள் நாடாளுமன்றம் செல்வதை தடுக்கும் நோக்கத்துடனும், இந்தக் கடைசி நிமிட நகர்வு மேற்கொள்ளப்பட்டது. வெளிச்சவீடு சின்னத்தில் போட்டியிட்ட ஈரோஸ் இயக்கம், ஈபிக்காரன்க

தொடர்ச்சி▼



# இன்று ஜே.வி.பி வென்று செய்வதை அன்று ஈரோஸ் நன்றே செய்த காதை

தொடர்ச்சி▲

ளின் அச்சுறுத்தல்களிற்கு பயந்தோ என்னவோ, தேர்தல் பிரச்சாரத்தில் அடக்கியே வாசித்தது. அவங்கள் காட்டும் திசையில் தான் சனம் வாக்களிக்கும் என்பதையும் ஈரோஸ் இயக்கம் நன்கே அறிந்திருந்தது.

தேர்தல் முடிவுகள் வெளியான போது, வடக்கு கிழக்கு எங்கும் மாற்றத்தின் சின்னமான வெளிச்ச வீடு பிரகாசித்தது. யாழ்ப்பாணத்தில் ஈரோஸிற்கு 8 ஆசனங்களும், EPRLF இற்கு 3 ஆசனங்களும் கிடைத்தன. ஈரோஸின் ஸ்தாபகர்களில் ஒருவரான இரத்தினசபாபதியிற்கு அதிக விருப்பு வாக்குகள் கிடைத்தது. அவரோடு, பின்னாளில் தமிழீழ நீதித்துறை பொறுப்பாளராயிருந்த, பரா, மாமனிதர் சிவமகாராசா ஆகியோரும் தெரிவாகினர். EPRLF சார்பில் போட்டியிட்ட மூவரும் தெரிவாகினர். சுரேஷ் பிரேமச்சந்திரனை விட நவரத்தினத்திற்கு கிடைத்த வாக்குகள் அதிகம். தமிழர் விடுதலை கூட்டணி பிரமுகர்கள் அனைவரும் தோல்வியைத் தழுவினார்கள்.

மட்டக்களப்பிலும் அதே கதை, அமிர் தோல்வி, டெலோ கருணாகரனுக்கு அதிகப்படியான வாக்குகள். அவரோடு பிரின்ஸ் காசிநாதரும் சாம் தம்பிமுத்துவும் தெரிவானார்கள். அமிர்தலிங்கம் தேசிய பட்டியலூடாக நாடாளுமன்றம் புகுந்தார். ஈரோஸிற்கு திருகோணமலையில் 2, வன்னியில் 1, தேசியப் பட்டியலில் 1 என்று ஆக மொத்தம் 12 ஆசனங்கள் கிடைத்தன.

தேசியப் பட்டியலில் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பையும் தட்டிக் கழித்து விட்டு, ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் வே. பாலகுமார், யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மாறி மாறி நிலைகொண்டு தனது இயக்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களை வழிநடத்தும் தலைமைத்துவ வகிபாகத்தை செவ்வனே நடத்திக் கொண்டிருந்தார். ஈரோஸ் இயக்கத்திற்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனம் ஈரோஸ் இயக்கத்தின் ஏறாவூர் பொறுப்பாளரான பஷீர் சேகுதாவூதிற்கு வழங்கப்பட்டது.

தேர்தலின் பின்னர், மே 4, 1989 ஆம் ஆண்டு பிரேமதாஸ அரசிற்கும் இயக்கத்திற்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் கொழும்பு ஹில்ட்டன் ஹோட்டலில் ஆரம்பமாகி, ஜூன் 10, 1990ல் முடிவிற்கு வந்தது. யுத்தம் ஆரம்பமாகி 15 ஆவது நாள், 12 ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்யுமாறு இயக்கத்தால் பணிக்கப்பட்டனர். சில வாரங்களிற்கு பின்னர் ஈரோஸ் இயக்கம் பிளவுற்று, வே. பாலகுமார் தலைமையிலான ஈரோஸ் அணி இயக்கத்துடன் இணைந்து கொண்டது.

நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்று ஈரோஸ் இயக்கத்தின் இரத்தினசபாபதி, “எம்மைப் பொறுத்தவரையில் இந்த நாடாளுமன்றத்தை தமிழ் பேசும் மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிமுறையுள்ள சபையாக நாம் கருதவில்லை. சாதாரண பெரும்பான்மை மூலம் தீர்மானம் இயற்றும் வழிமுறையுடைய இச்சபையில் தமிழ்த்தேசிய இனமானது தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய தீர்மானம் எதையும் நிறைவேற்றும் ஆற்றல் உடையதாக இங்கு இருக்க முடியாது.” என்று ஆற்றிய கன்னி உரை எந்தக் காலகட்டத்திற்கும் பொருத்தமானதே.

1989 இல் நாடாளுமன்றத்திற்கு தெரிவான ஈரோஸ் இயக்கத்தினரை அன்று இராஜினாமா செய்ய வைக்காமல் இருந்திருந்தால், அவர்கள் தமிழ் தேசியத்தின் குரலாக அரிய பணியாற்றியிருப்பார்கள். அதைவிட முக்கியமாக, 1994 இல் பத்து பதினைந்து வாக்குகளுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து பத்து ஈபிடிபியினரை நாடாளுமன்றம் வரவும் விட்டிருக்க மாட்டார்கள். அதையும் விட முக்கியமாக, 2000 இல் பாவமன்னிப்பு அளிக்கப்பட்ட கூட்டணி. ஈபி, டெலோவை உள்வாங்கி உருவாக்கப்பட்ட வுயே இற்கும் தேவை எழுந்திராது.

2009 இற்கு பின்னர் தமிழ் தேசிய கட்சிகளில் இருந்து தெரிவான பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள், தமிழ் தேசியம் பேசும் அனைவரின் மேலும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கசப்புணர்வை ஏற்படுத்தியுள்ளமையும், இன்று சிங்கள தேசிய சோஷலிஸ ஜேவிபியின் அலை அடிப்பதற்கு பிரதான காரணம். ஆனால், இன்றும், தமிழர் தாயகப் பகுதிகளில், உண்மையான தமிழ் தேசிய பற்று நீறு பூத்த நெருப்பாக பல இளையோரில் உறைந்திருப்பது, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை தருகிறது.

நிறைவாக, இலங்கை தேசத்தில் ஜேவிபி கொண்டுவர முனையும் மாற்றம் வரவேற்கத்தக்கது. அந்த மாற்றத்தில் நாங்களும் பங்காளிகளாக வேண்டியதும் காலத்தின் கட்டாயம். எங்களது பங்களிப்பு, நாங்கள் ஒரு இனக் குழுமமாக தேசிய அரசில் இணைவதாக அமைய வேண்டுமேயன்றி, எங்கள் பகுதிகளின் நாடாளுமன்றக் கதிரைகளை ஜேவிபி இற்கு தாரை வார்ப்பதாக அமைந்து, எங்களது அடையாளத்தையும் தனித்துவத்தையும் இழப்பதாக அமைந்து விடக்கூடாது.

தமிழர் பகுதிகளில் தொண்ணூறுகளில் வீசிய சந்திரிக்கா தன்றல் போல, அநுர அலையும் அடித்து ஓயட்டும். இதுவும் கடந்து போகட்டும்.. போகும்.

# மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றது பொதுக்கட்டமைப்பு

(ந.லோகதயாளன்)

“சங்கு சின்னத்துக்காகத் தற்போது அதே சின்னத்திள் போட்டியிடுபவர்கள் மட்டும் உழைக்கவில்லை. பலரின் உழைப்பு அதில் உண்டு. தேச திரட்சியை உருவாக்க முயன்று வெற்றி கண்டு சில நாட்களில் அது சிதறுண்டு போயுள்ளது. அதற்காக நாம் மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம். அத்துடன் பொதுக்கட்டமைப்பும் தற்போது இல்லை.”

– இவ்வாறு பொதுக்கட்டமைப்பின் முக்கியஸ்தரும் எழுத்தாளருமான நிலாந்தன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்கள் பொதுச் சபை ஜனாதிபதி தேர்தலைக் கையாண்டது போன்று ஏனைய தேர்தல்களைக் கையாள முடியாததால் நாடாளுமன்றத் தேர்தலில் விலகி இருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் பாவித்த சங்கு சின்னத்தைப் பாவிக்க வேண்டாம் எனக் கோரினோம். கட்சிகள் சங்கு சின்னத்தை எடுக்காது இருந்திருக்கலாம். அதனையும் மீறி எடுத்துள்ளார்கள்.

சங்கு சின்னத்துக்கும், தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும், பொதுக் கட்டமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

தமிழ் மக்கள் பேரவையின் கூர்ப்பாகவே தமிழ் மக்கள் பொதுச் சபையாகும். பொதுச் சபை அடுத்த கூர்ப்புக்குப் போன பின்னரே தேர்தல்களை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பொதுச் சபை ஜனாதிபதித் தேர்தலில் தேச திரட்சியை எதிர்பார்த்து, அதில் வெற்றியும் பெற்றோம். அது சில நாட்களில் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்புடன் சிதறியுள்ளது.



நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பலம் தமிழ் மக்கள் பொதுச் சபையிடம் இல்லாததால், அதில் இருந்து விலகி இருக்கின்றோம். எனவே, மக்கள் நாணயமானவர்களுக்கும் கறைபடியாதவர்களுக்கும் தேச திரட்சிக்காக மக்கள் வாக்களிக்க வேண்டும்.

சங்கு சின்னம் புனிதமானது இல்லை. அதற்கு யாரும் உரிமை கோர முடியாது. அது ஒரு பொது நிலைப்பாட்டுக்கான குறீயிடு. பொதுக் கட்டமைப்பில் இருந்த பலர் வெளியில் நிற்கும்போது சிலர் மட்டும் அதனைப் பயன்படுத்துவது அறம் இல்லை.

சங்கு சின்னத்துக்காகத் தற்போது அதே தேர்தலில் சின்னத்தில் போட்டியிடுபவர்கள் மட்டும் உழைக்கவில்லை. பலரின் உழைப்பு அதில் உண்டு. தேர்தல் பிரச்சாரத்துக்குப் பலர் முன்னரங்கில் வந்து உழைக்காமல் பின்னின்று உழைத்தவர்களும் உண்டு.

தேச திரட்சியை உருவாக்க முயன்று வெற்றி கண்டு சில நாட்களில் அது சிதறுண்டு போயுள்ளது. அதற்காக நாம் மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம். அத்துடன் பொதுக் கட்டமைப்பும் தற்போது இல்லை.” – என்றார்.



# நிலவும் அனர்த்த நிலைமையால் பாடசாலைகளுக்கு விடுமுறை

கம்பஹா, களனி கல்வி வலயங்களுக்கு உட்பட்ட அனைத்து பாடசாலைகளுக்கும் இன்றும் மற்றும் நாளையும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் அனர்த்த நிலைமையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ, கடுவளை – கோட்டக்கல்வி பிரிவுகளுக்கு உட்பட்ட பாடசாலைகளையும் எதிர்வரும் 2 நாள்களுக்கு மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்

அத்துடன், கொழும்பு கல்வி வலயத்தில் தேசிய பாடசாலைகள் உள்ளடங்களாக அனைத்து பாடசாலைகளையும் இன்று மாத்திரம் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்

இதேவேளை, நாட்டின் ஏனைய பகுதிகளில் நிலவும் அனர்த்த நிலைமைக்கு மத்தியில் தேவையேற்படின் பாடசாலைகளை மூடுவதற்கு மாகாண அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -14.10.2024




இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களை குறித்த நேரத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்தநேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். உங்கள் பொறுப்புகளை சிறப்பாக செய்வீர்கள்.

இன்றுஆரோக்கியமாகஇருப்பீர்கள்.நல்லஉணவுமுறை ஆரோக்கியத்தை சிறப்பாக தக்க வைக்கும். கால் வலிவர வாய்ப்புள்ளதால் லேசான உடற்பயிற்சி மேற்கொள்ளவும்.




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியைப் பெறலாம்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணியாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாக பேச வேண்டும். எண்ணங்களில்தெளிவும்அதனைபேச்சில்வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று அதிகம் செலவாக வாய்ப்புள்ளதால் பண விஷயத்தில் கவனம் தேவை. எந்த விஷயத்திற்கு எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்று சாதுர்யமாக முடிவெடுங்கள்.

உணவில் கவனம் தேவை. குளிர்ச்சியான உணவை உட்கொண்டால் தொண்டை வலி ஏற்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று மனதில் தெளிவு வேண்டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுதல் அளிக்கும்.

இன்று வேலைகள் கூடுதலாக இருந்தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படுவீர்கள். பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப்படுத்தி சேமிப்பை திகரிக்க இயலும்.

உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாய் இருக்க பணம் செலவு செய்ய நேரும். குழந்தைகளுக்கு வயிற்று உப்பசம் வர வாய்ப்புள்ளதால் அவர்கள் உணவில் கவனம் தேவை.




இன்று தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வது மிகவும் அவசியம். அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. என்றாலும் பணத்தை சிறப்பாக கையாண்டால் தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்த இயலும்.

மருத்துவரை ஆலோசிப்பது சிறந்தது. பற்களுக்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். கால் வலி மற்றும் கண் எரிச்சல் வர வாய்ப்புள்ளது.இதனால் கவலை ஏற்படும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.

இன்று உங்களிடம் நேர்மறை எண்ணம் காணப்படும். அது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.




இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும். யோகா மற்றும் தியானம் மூலமும் பலன் பெறலாம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகள அதிகம் இருப்பதாக உணர்வீர்கள். சிறந்த யுக்திகளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப்போவதும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம். புரிந்துணர்வு மிகவும் அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். செலவுகளை முடிந்த அளவில் கட்டுப்படுத்தி கையிலிருக்கும் பணத்தில் சமாளிப்பது சிறந்தது.

கண்கள் மற்றும் பற்களுக்கு மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்துகொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்துகொள்ளவும் சில முக்கியமான விஷயத்தைப்பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.

சாதரணமாக செய்யும் செலவைக் காட்டிலும் இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். முடிந்த அளவு செலவைக் குறைக்க வேண்டும். அது சிறிய அளவு என்றாலும் பயனுள்ளதாக இருக்கும்.

இன்று உங்கள் அணுகுமுறையில் எச்சரிக்கை தேவை. சிறிது அஜாக்கிரதையாக இருந்தாலும் அது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.நடை பயிற்சி அல்லது உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்புணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதியும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற்றிக்கு இதுவே முதல் காரணமாக அமையும். இன்றைய நாளை சிறப்பாக்குங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப் பணிகளைக் கூட இன்று கவனமுடன் கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதட்டத்துடன் காணப்படுவீர்கள். பதட்டப்படாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த வேண்டியிருந்தால் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று அதிக பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். இதனை உங்களால் சமாளிக்க இயலும் என்பதால் கவலை வேண்டாம். உங்கள் வரவு மற்றும் செலவை கண்காணியுங்கள். அனைத்தும் சிறப்பாக நடக்கும்.

பதட்டப்படாதீர்கள். தேவைப்படும்போது ஓய்வெடுங்கள். கட்டுப்பாட்டுடன் இருங்கள். நீங்கள் அதிகம் பதட்டப்பட்டால் கால் வலி ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -14.10.2024




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதைஅடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். உங்களுக்கு நீண்ட கால பயன் தரும் விஷயத்திற்கு இன்று பணம் செலவு செய்வீர்கள்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி மற்றும் திட மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது.




உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு ஒத்துச் செல்லுங்கள். இன்று ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு உணவு அல்லது பணம் அளியுங்கள். இன்றைய நாளை கழிக்க ஏதாவது ஒரு பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பணியிடத்தில் உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும். அமைதியாக பணிகளை மேற்கொள்ளுங்கள்.இதன் மூலம் பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே எந்தவிதமான அகந்தைப் பிரச்சினையும் வரவிடாதீர்கள். உங்கள் துணையை புரிந்து கொள்ள முயலுங்கள். அவருக்கு ஆதரவு அளியுங்கள். இதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிக்க வேண்டியது முதன்மையானது. கவலையற்ற எதிர்காலத்திற்கு பணத்தை கையாளும் திறமை தேவை.

முடிந்த அளவு அமைதியாக இருங்கள். தியானம் மேற்கொள்ளுங்கள். இது தான் உங்கள் சிறந்த ஆரோக்கியத்திற்கான வழி.




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரணமாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள். உங்கள் சம்பாத்தியமும் சேமிப்பும் இன்று ஏறுமுகமாக இருக்கும்.

மகிழ்ச்சி என்பது நம்முள் பிறப்பது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எந்த விஷயத்திற்கும் பதட்டப்படாதீர்கள். அதனை கடைபிடித்தால் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




நீங்கள் இன்று உணர்ச்சிப்பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள்ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப்பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.

பண விஷயத்தில் பொறுமை தேவை சரியான நேரத்தில் உங்களுக்கு பணம் கிடைக்கும். பண விஷயத்தைப் பற்றி கவலைப்படுவதனால் எந்தப் பலனும் இல்லை.

திரவ உணவுகள் குறிப்பாக நீர் மற்றும் எலுமிச்சை சாறு உட்கொள்வது சிறந்தது. இது வயிற்று வலியைக் குறைக்கும்.





